**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**
**<u>சி.சி.எண்.133/2019</u>**

அ.சா.2 பரமேஷ்வரி க/பெ. பொண்ணன் 05.01.2024

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடரப்படுகிறது.

நான் பள்ளியில் சமயலராக வேலைசெய்கிறேன் என்றால் சரிதான். நான் 10 வருடத்திற்கு மேல் மேற்படி வேலையை செய்கிறேன். நான் வழக்கமாக பள்ளிக்கு காலை 9.00 மணிக்கு சென்றுவிடுவேன் என்றால் சரிதான். மீண்டும் எத்தனை மணிக்கு வீட்டிற்க்கு வருவேன் என்றால் 1.00 மணிக்கு வருவேன். 18.11.2016 அன்று நான் சொல்லிய தேதியில் பள்ளி இருந்தது என்றால் சிரிதான். அன்று நான் பள்ளிக்கு சென்றேன் என்றால் சரிதான், 09.00 மணிக்கு சென்றேன். நான் கையெழுத்து தான் போடுவேன். போலீசார் என்னிடம் வாங்கிய வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன். எனக்கும் பொண்ணன் என்பவருக்கும் எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் வருடம் தெரியவில்லை. எத்தனை வருடத்திற்கு முன்பு திருமணம் நடந்தது என்றால் எனக்கு 18 வயது இருக்கும் போது திருமணம் நடந்தது. தற்போது எனக்கு வயது என்ன என்றால் 50 ஆகிறது. எத்தனை வருடத்திற்கு முன்பு எனது கணவர் பொண்ணன் என்னை விட்டு பிரிந்தார் என்றால் 10–12 வருடம் ஆகிறது. குப்பம்மாளை 2வது ஆக பொண்ணன் திருமணம் செய்துக்கொண்டது எப்போது என்றால் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு இருக்கலாம். அவர் எங்கு சென்றார் என்றால் எங்கள் ஊரில் தான் மேற்படி குப்பம்மாளுடன் இருந்தார். இடையில் 4–5 வருடம் எங்கோ சென்றுவிட்டார் அதன் பிறகு தான் குப்பம்மாளுடன் ஊருக்கு வந்தார். அவர்களுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 மகன்கள், 2 மகள்கள். அவர்கள் பெயர் தெரியுமா என்றால் மாதவன், மோகன், பெண்கள் பெயர் தெரியவில்லை. பொண்ணன் எனக்கு திருமணத்திற்கு முன்பு என்ன உறவுமுறை என்றால் தாய்மாமன். நான் எத்தனை ஆண்டுகளாக நிலத்தை உழுதுக்கொண்டிருந்தேன் என்றால் சுமார் 30 வருடமான உழுதுக்கொண்டிருக்கிறேன். நான் 30 வருடமாக ஓட்டிக்கொண்டிருந்ததாக சொல்லப்படும் காலகட்டத்தில் பிரச்சனை ஏதும் ஏற்பட்டதா என்றால் சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு தான் பிரச்சனை ஏற்பட்டது. நான் 2016ம் வருடம் மேற்படி சொத்திற்காக சிவில் நீதிமன்றத்தில் வழக்கு போட்டேன் என்றால் சரிதான். யார் மீது வழக்கு போட்டேன் என்றால் எதிரிகள் 4 நபர்கள் மீதும் அந்த வழக்கை போட்டேன். அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டதா என்றால் இல்லை. தற்போதும் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் உள்ளது. தற்போது சொத்தை யார் பேரில் உள்ளது என்றால் என் பெயரிலிருந்து என் மகன் பெயருக்கு எழுதி வைத்தேன். நான் கோவிந்தன் என்பவரை திருமணம் செய்து வாழ்ந்து வருகிறேன் என்றால் இல்லை. நானும், கோவிந்தன் என்பரும் சேர்ந்து பெருமாள் என்பவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் நான் தான் கொடுத்தேன், கோவிந்தன் கொடுக்கவில்லை. நானும், கோவிந்தனும் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்த காலத்தில் நானும் அவரும் சேர்ந்து பெருமாள் மீது திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. கத்தியை காவல் நிலையத்தில் யார் கொடுத்தது என்றால் நானும் எனது மருமகளும் காவல் நிலையத்தில் கொடுத்தோம். டிராக்டர் ஓட்டிய நபர் யார் என்றால் ஜோன்றம்பள்ளியை சார்ந்தவர் பெயர் தெரியவில்லை.நான்

சொல்வது போல் எந்த சம்பவம் நடக்கவில்லை என்றாலும், சிவில் வழக்கு நிலுவையில் உள்ளதால் பொய்யான புகாரை கொடுத்தேன் என்றால் சரியல்ல. சிவில் வழக்கு எப்போது தாக்கல் செய்தேன் என்றால் தேதி நினைவில்லை. எனக்கு திருமணத்தேதி திருமணம் நடந்த வருடம் ஆண்டுகள் எதுவுமே தெரியாத சூழ்நிலையில் சம்பவம் தேதி மட்டும் 18.11.2016 என்று கூறியுள்ளது தவறானது என்றால் சரியல்ல. பொன்னன் என்னை எப்போதும் திருமணம் செய்யவில்லை என்று சிவில் வழக்குகளில் கூறி பதில் தாக்கல் செய்துள்ளார் என்றாலும், நான் மேற்படி கோவிந்தன் என்பவருடன் குடும்பம் நடத்திவிட்டு தற்போது பொன்னன் மீதும் அவர்கள் குழந்தைகள் மீதும் தவறாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. சுப்பிரமணி என்னுடன் காவல் நிலையம் வந்தாரா என்றால் இல்லை, அவரை எங்கள் ஊருக்கு வந்துபோலீசார் விசாரித்தார்கள். எப்போது விசாரித்தார்கள் என்றால் காலை 8.00 மணிக்கு நிலத்தில் வைத்து விசாரித்தார்கள். தேதி நினைவில்லை. யார் யாரிடம் அப்போது போலீசார் விசாரித்தார்கள் என்றால் ஊர் காரரிடம் விசாரித்தார்கள். அவர்கள் பெயர்கள் என்ன என்றால் தங்கராஜி, மற்றும் சில நபர்களை விசாரித்தார்கள். சுப்பிரமணியை விசாரிக்கும் போது நான் அங்கு இருந்தேனா என்றால் இருந்தேன். மருத்துவமனையில் யார் எத்தனை நாட்கள் இருந்தோம் என்றால் என் மகன் ஒன்பது நாள் இருந்தார். நான் மருததுவமனயில் முதல் 2 நாட்கள் இருந்தேன். என் மருமகள் எனக்கு சொந்தமா என்றால் இல்லை. அவர் எந்த ஊர் என்றால் எங்கள் பெரும்பள்ளியை சார்ந்தவர். பொன்னன் உடன் பிறந்தவர் யார் இருக்கிறார்கள் என்றால் கோதண்டம், சந்திரன் உள்ளனர். நான் எதிரிகள் மீது பொய்யான வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிகளை அலைக்கழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்